**லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனி - 2023**

-------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

| | உரிய நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது நிறுவனத்திற்கு தொடர்ந்தியங்கும் இயலுமை தொடர்பான மதிப்பீடொன்று முகாமைத்துவத்தினால் செய்யப்பட வேண்டிய போதிலும், இக் கம்பனி இலங்கை போக்குவரத்து சபைக்கு கையளிக்கப்படுவதற்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிலும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்போது குறிப்பிட்ட கையளித்தல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன், அதற்கான உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 26 ஆம் பிரிவின் பிரகாரம் பெற வேண்டிய கணக்கு மீதிகளுக்காக இழப்பீட்டு நட்ட ஒதுக்கமொன்று செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையிடமிருந்து 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,043,353 ஆன மீதிகள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு நட்ட ஒதுக்கத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட ரூபா 4,043,353 ஐ இலங்கை போக்குவரத்துச் சபையுடன் கலந்துரையாடி மீளப் பெற்றுக் கொள்வதற்கு முடியாவிட்டால் இழப்பீட்டு நட்டமாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு நட்ட ஒதுக்கத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு கணக்கீடு செய்யப்பட்ட போது மீளாய்வாண்டிற்கான 33 ஊழியர்களின் சேவைக்காலம் குறைவாக கணக்கீடு செய்யபபட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 637,572 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். குறிப்பிட்ட ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா 637,572 சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 10,000,000 ஆன நிலையான சொத்துக்கள் கணக்கிடப்பட்ட போது அதில் ரூபா 4,735,000 ஆனது மீண்டும் 2022 ஆம் ஆண்டிலும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் ரூபா 4,773,500 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மதிப்பு கணக்கிடப்பட்டு அது சொத்துப் பதிவேட்டில் மற்றும் பேரேட்டின் மதிப்புக்கள் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 10,000,000 | 5,265,000 | சரியான பெறுமதி கணக்கிடப்பட்டு அது சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் பேரேட்டின் மதிப்புக்கள் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க மற்றும் 1992 இன் 62 ஆம் இலக்க (திருத்திய) பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு | ஊழியர்கள் சேவையிலிருந்து விலகி ஒரு மாதத்திற்குள் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 433,188 மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | இதற்கு பல வருடங்களுக்கு முன்னர் நிறுவனத்தின் நிதி நிலைமை நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பணிக்கொடைத் தொகை கொடுப்பனவு தாமதமானதால் இந்த ஆண்டில் அதற்கான மிகைக் கட்டணம் செலுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன் தற்போது குறிப்பிட்ட கால எல்லைக்குள் பணிக்கொடை தொகை செலுத்தப்பட்டு வருகின்றது. | சட்டங்கள் விதகளின் பிரகாரம் பணிக்கொடை கொடுப்பனவு விலகிய ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவு | மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 5 சதவீதத்திற்கு குறையாத தொகையொன்று செயற்திறன் பாதுகாப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனிக்கு மாதாந்தம் ரூபா 480,000 ஆன பெறுமதிக்கு பாதுகாப்புச் சேவை பெறப்பட்டிருந்தமை தொடர்பாக வழிகாட்டியின் பிரகாரம் செயற்திறன் பாதுகாப்பொன்று பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்புச் சேவை நிறுவனத்திடமிருந்து அறவீடொன்று மேற்கொள்ளப்பட்ட போது அது அவர்களின் பற்றுச் சீட்டிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. அவர்கள் மற்றும் எமது நிறுவனம் பாதுகாப்புச் சேவை தொடர்பாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனத்துடன் 3 சதவீதத்திற்கு குறையாத தொகையொன்று செயற்திறன் பாதுகாப்பொன்றாக பெற்றுக்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | i. 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவுற்ற 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணககாய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும், 63 நாட்கள் தாமதத்துடன் 2024 மே 02 ஆம் திகதி | 2024.02.28 ஆம் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டதுடன், பணிப்பாளர் சபைக் கூட்டமொன்று நடாத்தப்பட | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | முடியாமை காரணமாக இறுதிக் கணக்குகள் கணககாய்வாளர் தலைமை அதிபதிகது சமர்ப்பிக்கப்படுவதற்கு தாமதமானது. | |
| i | 6.7 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 யூன் 30 வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள தென்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் சேவை நிலையம் 2021 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு இது வரை இயங்கி வருவதுடன், அதற்குத் தேவையான தகுதி வாய்ந்த ஊழியர் குழுவொன்று இல்லாத காரணத்தால் வாகனங்கள் வெளயாரி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டிலும் வாகனங்கள் பழுதுபார்ப்பிற்காக வெளியார் நிறுவனங்களுக்கு ரூபா 15,012,342 செலுத்தப்பட்டிருந்தது. சேவை நிலையத்தின் கிரயம் ரூபா 20,858,703 ஆக இருந்த போது வருமானம் ரூபா 17,906,855 ஆக இருந்தமையால் சேவை நிலையத்தை நடாத்திச் செல்வதில் மீளாய்வாண்டில் கம்பனிக்கு ரூபா 2,951,848 ஆன நட்டம் ஒன்று ஏற்படுவதற்கு நேரிட்டது. | வாகனங்கள் சேவை நிலையத்தின் பணிகளை முறையாக மேற்கொள்வதற்கு முறையான பயிற்சி பெற்ற தொழிநுட்ப வல்லுநர்களை ஆட்சேர்பபதற்காக பல சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கான அங்கீகாரம நிறுவனத்திற்க் வழங்கப்படவில்லை. | சேவை நிலையத்தின் வருமானத்தை அதிகரித்து மற்றும் கிரய முகாமைத்துவத்தின் மூலம் இலாபமீட்டும் பிரிவொன்றாக மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் 28 பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 121 ஆக இருந்ததுடன் உயர் முகாமைத்துவ நிலைக்கு உரித்தான முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் போன்ற பதவிகள், ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட 2018 ஆம் வருடம் முதல் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் கணக்காளர் பதவி 2021 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | உரிய பதவிகளுக்கான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் எதுவும் நிறுவனத்திற்கு வழங்கப்படாத காரணத்தினால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. | பணி ஒப்படைகளுக்குத் தேவையான வகையில் மனித வளம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பழுதுபார்த்தல் பணிகளுக்காக மீளாய்வாணடில் கம்பனிக்கு பெறப்பட்ட 83 பேருந்துகளில் 69 இற்கான பழுதுபார்த்தல் பணிகளை ஆரம்பிப்பதற்கு 7 நாட்கள் முதல் 113 நாட்கள் வரையான கால தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் தேவையான பொருட்கள் இல்லாமை அத் தாமதத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் சரியான முறையில் மேற்கொள்ளப்படாமையினால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இந் நிலைமையை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | காலதாமதமின்றி பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,039,032 இற்கான இலாபம் ஒன்றாக காணப்பட்டதுடன், அதற்கெதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 20.197,033 தொகை ஆகும். அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 48,236,065 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனைக் கிரயம் மற்றம் நிர்வாகச் செலவுகள் குறைவடைந்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 16 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் , விற்பனைக் கிரயம் 36.13 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 1.85 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் விகிதம் 1.33 ஆகக் காணப்பட்டது.

மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் 29 சதவீதமாகக் காணப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டின் விகிதமான 8 சதவீதத்திற்கு ஒப்பாக 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

### 3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவை நிலைய பணிகளை மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 11,407,706 பெறுமதியான உபகரணங்கள் குறை பயன்பாடுடையதாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,684,975 பெறுமதியான 3டீ வீல் எலயின்மன்ட் (3D wheel Alignment) உபகரணம் செயற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | இந்த உபகரணத்திற்காக பயிற்சி பெற்ற தொழிலாளர் இல்லாமையினால், குறிப்பிட்ட இயந்திரம் முறையாக நிறுவப்படாததன் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளது | இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |